# அன்னைக்கு செபமாலை



சிங்கப்பூர் உயர்மறைமாவட்டத்
தமிழ் ஆணையம்

## தொடக்கப் பாடல்:

முத : திருச்சிலுவையின் அடையாளத்தினாலே எங்கள் பகைவர்களிடமிருந்து எங்களை மீட்டருளும் இறைவா! தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே...

எல் : ஆமென்.

## தூய ஆவியானவர் செபம்:

எல்: தூய ஆவியாரே எழுந்தருளி வாரும். விண்ணகத்தில் இருந்து உமது பேரொளியின் அருள் சுடர் எம் மீது அனுப்பிடுவீர். எளியோரின் தந்தையே, நன்கொடை வள்ளலே, இதய ஒளியே வந்தருள்வீர். ஆமென். உன்னத ஆறுதலானவரே, ஆன்ம இனிய விருந்தினரே இனிய தன்மைத் தருபவரே, உழைப்பின் களைப்பைத் தீர்ப்பவரே, வெம்மைத் தணிக்கும் குளிர் நிழலே, அழுகையில் ஆறுதலானவரே, உன்னத பேரின்ப ஒளியே, உம்மை நம்புவோருடைய இதயத்தின் ஆழத்தை நிரப்பிடுவீர். உமது அருள் ஆற்றல் இல்லாமல் மனிதரில் எதுவும் இல்லை. நல்லது அவனில் எதுவும் இல்லை.

மாசு கொண்டதைக் கழுவிடுவீர்.

வறட்சி உற்றதை நனைத்திடுவீர்.

காயப்பட்டதை ஆற்றிடுவீர்.

வணங்காதிருப்பதை வளைத்திடுவீர்.

குளிரானதை குளிர் போக்கிடுவீர்.

தவறிப் போனதை ஆண்டருள்வீர்.

இறைவா, உம்மை நம்பும் அனைவருக்கும்,

உமது ஏழு கொடைகளையும் வழங்கிடுவீர்.

புண்ணியப் பலன்களையும் வழங்கிடுவீர். இறுதியில்,

மீட்பை அளித்து அழிவில்லாத இன்பமும் அருள்வீரே.

ஆமென்.

## தொடக்கச் செபம்:

எல்: எல்லா நன்மைகளும் நிறைந்த அன்பு இறைவா, கெட்ட மனிதரும், நன்றி இல்லாதப் பாவிகளுமாய் இருக்கிற எங்கள் மீது, அளவில்லாத மாட்சி கொண்டிருக்கும் உம் திருச்சந்நிதிலே இருந்து செபம் செய்ய நாங்கள் தகுதி அற்றவர்களாய் இருந்தாலும், உமது அளவற்ற இரக்கத்தில் நம்பிக்கை வைத்து உமது மாட்சிக்காகவும், அன்னை மரியாவின் புகழ்ச்சிக்காகவும் ஐம்பத்து மூன்று மணி செபமாலை தொடுக்க ஆசையாய் இருக்கிறோம். இந்த செபத்தை பக்தியோடு செய்து, எவ்வித கவனச் சிதறல்களும் இல்லாமல் முடிக்கத் உமது அருளை எங்களுக்குத் தந்தருளும். ஆமென்.

முத: எல்லா புண்ணியங்களுக்குள் நமது நம்பிக்கையே நமக்கு அடித்தளமாக இருப்பதால் நாம் நமது நம்பிக்கையை அறிக்கை செய்வோம்:

## நம்பிக்கை அறிக்கை:

எல்: விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளை நம்புகின்றேன். அவருடைய ஒரே மகனாகிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்புகின்றேன். (பிறந்தார் எனச் சொல்லும் வரை எல்லாரும் தலை வணங்கவும்) இவர் தூய ஆவியால் கருவுற்று கன்னி மரியாவிடமிருந்து பிறந்தார். பொந்தியு பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டுச் சிலுவையில் அறையப்பட்டு, இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். பாதாளத்தில் இறங்கி, மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். விண்ணகத்திற்கு எழுந்தருளி, எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கின்றார். அங்கிருந்து வாழ்வோ

ருக்கும் இறந்தோருக்கும் தீர்ப்பு வழங்க வருவார். தூய ஆவியாரை நம்புகின்றேன். புனித, கத்தோலிக்கத் திரு அவையை நம்புகின்றேன். புனிதர்களின் உறவு ஒன்றிப்பை நம்புகின்றேன். பாவ மன்னிப்பை நம்புகின்றேன். உடலின் உயிர்ப்பை நம்புகின்றேன். நிலைவாழ்வை நம்புகின்றேன். ஆமென்.

முத: உண்மையான இறைவனும் உண்மையான மனிதனுமாக இருக்கிற நம் ஆண்டவர் இயேசு கற்பித்த செபத்தை நாம் அனைவரும் சேர்ந்து சொல்லுவோம்.

## கர்த்தர் கற்பித்த செபம்:

முத: விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப் பெறுக! உமது ஆட்சி வருக. உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக.

எல்: எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

## மங்கள வார்த்தை செபம்:

முத: அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே.

எல்: தூய மரியே, இறைவனின் தாயே, பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக்கொள்ளும். ஆமென்.

முத: தூய கன்னியாய் இருக்கிற நம் இறை அன்னையின் முக்கியமான மகிமைகளைக் குறித்து மூன்று முக்கியமான பேறுபலன்களைப் பெற நாம் அவரிடம் மன்றாடுவோம்.

முத: தந்தையாம் இறைவனுக்கு மகளாக இருக்கிற தூய கன்னி மரியாவே, எங்களிடம் விசுவாசம் வளர்ந்து பலன் அளிக்கும்படி உம் திருமகனிடம் எங்களுக்காக மன்றாடும்.
<u>மங்கள வார்த்தை செபம்</u>

முத: திருமகனாம் இறைவனுக்குத் தாயாக இருக்கும் தூய கன்னி மரியாவே, எங்களிடம் நம்பிக்கை வளர்ந்து பலன் அளிக்கும்படி உம் திருமகனிடம் எங்களுக்காக மன்றாடும்.
<u>மங்கள வார்த்தை செபம்</u>

முத: தூய ஆவியாராம் இறைவனுக்கு மிகவும் பிரியமுள்ளவராக இருக்கும் தூய கன்னி மரியாவே, எங்களிடம் பக்தி வளர்ந்து பலன் அளிக்கும்படி உம் திருமகனிடம் எங்களுக்காக மன்றாடும்.
<u>மங்கள வார்த்தை செபம்</u>

## <u>தமத்திருத்துவ செபம்:</u>

முத: தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக.

எல்: தொடக்கத்திலே இருந்தது போல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

## தூய பாத்திமா அன்னை செபம்:

எல்: ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களைப் பொறுத் தருளும். எங்களை நரக நெருப்பிலிருந்து மீட்டருளும். எல்லாரையும் விண்ணுலகப் பாதையில் நடத்தியருளும். உமது இரக்கம் யாருக்கு அதிகத் தேவையோ, அவர்களுக்குச் சிறப்பான உதவி புரியும்.

தகுந்த மறையுண்மைகள் பகுதியைச் சொல்லித் தியானிப்போம்.

- கர்த்தர் கற்பித்த செபம் (1)
- மங்கள வார்த்தை செபம் (10)
- தமத்திருத்துவ செபம் (1)
- தூய பாத்திமா அன்னை செபம் (1)

## மகிழ்ச்சி நிறை மறையுண்மைகள்:

(திங்கள் & சனி)

1. கபிரியேல் தூதர் அன்னை மரியாவுக்குத் தூதுரைத்ததைத் தியானித்து, தாழ்ச்சி என்னும் பண்பு நம்மிடம் வளர வரம் வேண்டித் தியானிப்போமாக!



2. இறை அன்னை மரியா எலிசபெத்தைச் சந்தித்ததைத் தியானித்து, பிறரன்பு என்னும் பண்பு நம்மிடம் வளர வரம் வேண்டித் தியானிப்போமாக!



3. இயேசு கிறிஸ்து பிறந்ததை தியானித்து, எளிமை என்னும் பண்பு நம்மிடம் வளர வரம் வேண்டித் தியானிப்போமாக!



4. இயேசுவைக் கோயிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்ததை தியானித்து, பணிவு என்னும் பண்பு நம்மிடம் வளர வரம் வேண்டித் தியானிப்போமாக!



5. காணாமல் போன இயேசுவைக் கண்டு அடைந்ததை தியானித்து, நாம் அவரை எந்நாளும் தேடி நிற்க வரம் வேண்டித் தியானிப்போமாக!



## ஒளி நிறை மறையுண்மைகள்:

(வியாழன்)

1. இயேசு யோர்தான் ஆற்றங்கரையில் திருமுழுக்கு பெற்றதை தியானித்து, நாம் என்றும் திருமுழுக்கு உறுதிமொழிகளை மறவாமல் வாழ வரம் வேண்டித் தியானிப்போமாக!



2. கானாவூர் திருமண விழாவில் இயேசு தண்ணீரைத் திராட்சை இரசமாக மாற்றியதை தியானித்து, விருந்தோம்பல் என்னும் பண்பு நம்மிடம் வளர வரம் வேண்டித் தியானிப்போமாக!



3. இயேசு விண்ணரசைப் பறைசாற்றியதைப் பற்றித் தியானித்து, நம் பாவ வழிகளை விட்டு, நற்செய்தியை நம் வாழ்வாக்கிட வரம் வேண்டித் தியானிப்போமாக!



4. இயேசு தாபோர் மலையில் உருமாற்றம் அடைந்ததைப் பற்றித் தியானித்து நாமும் இயேசுவின் மாட்சியைக் காண வரம் வேண்டித் தியானிப்போமாக!



5. இயேசு இறுதி இராவுணவு உண்டதை யும், நற்கருணையை ஏற்படுத்தியதையும் தியானித்து, இயேசு கிறிஸ்துவின் திரு உடலும் திருஇரத்தமும் நமக்கு ஆன்ம மருந்தாகத் திகழ வரம் வேண்டித் தியானிப்போமாக!



## துயர் நிறை மறையுண்மைகள்:
(செவ்வாய் & வெள்ளி)

1. இயேசு இரத்த வியர்வை சிந்தியதைத் தியானித்து, நாம் நம் பாவங்களுக்காக மனத்துயர் அடைய வரம் வேண்டித் தியானிப்போமாக!



2. இயேசுவைக் கல்தூணில் கட்டி அடித்ததைத் தியானித்து, நாம் நம் ஐம்புலன்களையும் அடக்கி வாழ வரம் வேண்டித் தியானிப்போமாக!



3. இயேசுவின் தலையில் முள்முடி சூட்டியதைத் தியானித்து, நாம் நம்மை ஒடுக்கி, துன்பங்களையும் தோல்விகளை யும் மகிழ்ச்சியுடன் ஏற்க வரம் வேண்டித் தியானிப்போமாக!



4. இயேசு சிலுவை சுமந்து சென்றதைத் தியானித்து, நாமும் நம் வாழ்க்கைச் சுமையைப் பொறுமையோடு ஏற்று வாழ வரம் வேண்டித் தியானிப்போமாக!



5. இயேசு சிலுவையில் அறையப்பட்டு இறந்ததைத் தியானித்து நாம் இயேசுவை அன்பு செய்யவும், பிறரை மன்னிக்கவும் வரம் வேண்டித் தியானிப்போமாக!




## மாட்சி நிறை மறையுண்மைகள்:

(புதன் & ஞாயிறு)

1. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்ததைத் தியானித்து, உயிருள்ள நம்பிக்கையுடன் நாம் வாழ வரம் வேண்டித் தியானிப் போமாக!



2. இயேசு கிறிஸ்துவின் விண்ணேற்றத்தை தியானித்து, நம்பிக்கையுடன் விண்ணக வாழ்வைத் தேடும் வரம் வேண்டித் தியானிப்போமாக!



3. தூய ஆவியார் அன்னை மரியா மீதும் திருத்தூதர்கள் மீதும் இறங்கியதைத் தியானித்து, நாம் அனைவரும் தூய ஆவியாரின் கொடைகளையும், ஒளியை யும், அன்பையும் பெற வரம் வேண்டித் தியானிப்போமாக!



4. அன்னை மரியாவின் விண்ணேற்பைத் தியானித்து, நாம் விண்ணக மகிமையில் நிலைவாழ்வு பெற வரம் வேண்டித் தியானிப்போமாக!



5. அன்னை மரியா விண்ணக மண்ணக அரசியாக மணி முடி சூட்டப்பட்டதைத் தியானித்து, நம் அன்னையின் மீது அன்பும், ஆழ்ந்த பக்தியும் கொள்ள வரம் வேண்டித் தியானிப்போமாக!



## இறுதி செபம்:

எல்: அதிதூதரான தூய மைக்கேலே, வானதூதர்களான தூய கபிரியேலே இர:பேலே திருத்தூதர்களான தூய பேதுருவே பவுலே யோவானே யாக்கோபே! நாங்கள் எவ்விதப் பாவிகளாய் இருந்தாலும், நாங்கள் மன்றாடிய இந்த ஐம்பத்து மூன்று மணி செபத்தையும் உங்கள் புகழ்ச்சியோடு ஒன்றாக சேர்த்துத் தூய அன்னை மரியாவின் திருப்பாதத்தில் காணிக்கையாக வைக்க உங்களை மன்றாடுகிறோம். ஆமென்.

## அன்னை மரியா மன்றாட்டு மாலை:

முத: ஆண்டவரே இரக்கமாயிரும்!

எல்: ஆண்டவரே இரக்கமாயிரும்!

முத: கிறிஸ்துவே இரக்கமாயிரும்!

எல்: கிறிஸ்துவே இரக்கமாயிரும்!

முத: ஆண்டவரே இரக்கமாயிரும்!
எல்: ஆண்டவரே இரக்கமாயிரும்!
முத: கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.
எல்: கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாகக் கேட்டருளும்.

முத: விண்ணகத்தில் இருக்கும் தந்தையாகிய இறைவா...
எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்!
முத: உலகத்தை மீட்ட மகனாகிய இறைவா...
எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்!
முத: தூய ஆவியாராகிய இறைவா...
எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்!
முத: மூவொரு கடவுளாய் இருக்கிற ஒரே இறைவா...
எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்!

**உங்கள் பதில்: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**

முத: புனித மரியாவே...
முத: இறைவனின் புனித அன்னையே...
முத: கன்னியருள் சிறந்தக் கன்னியே...
முத: கிறிஸ்துவின் அன்னையே...
முத: இறையருளின் அன்னையே...
முத: தூய்மை மிகுந்த அன்னையே...
முத: கன்னிமை குன்றாத அன்னையே...
முத: அன்புக்குரிய அன்னையே...
முத: வியப்புக்குரிய அன்னையே...
முத: நல்ல ஆலோசனை அன்னையே...
முத: மீட்பரின் அன்னையே...
முத: திருச்சபையின் அன்னையே...
முத: அறிவு மிகுந்த அன்னையே...

முத: போற்றுதலுக்குரிய அன்னையே...
முத: வல்லமையுள்ள அன்னையே...
முத: தயையுள்ள அன்னையே...
முத: நம்பிக்கைக்குரிய அன்னையே...
முத: நீதியின் அன்னையே...
முத: ஞானத்துக்கு இருப்பிடமே...
முத: எங்கள் மகிழ்ச்சியின் ஊற்றே...
முத: ஞானப் பாத்திரமே...
முத: மகிமைக்குரியப் பாத்திரமே...
முத: பக்தி நிறைந்தப் பாத்திரமே...
முத: மறைபொருளின் நறுமலரே...
முத: தாவீது அரசரின் கோபுரமே...
முத: தந்த மயமான கோபுரமே...
முத: பொன் மயமான ஆலயமே...
முத: உடன்படிக்கையின் பேழையே...
முத: விண்ணகத்தின் வாயிலே...
முத: விடியற்காலையின் விண்மீனே...
முத: நோயுற்றோருக்கு ஆரோக்கியமே...
முத: பாவிகளுக்கு அடைக்கலமே...
முத: துயருறுவோருக்குத் தேற்றரவே...
முத: கிறிஸ்தவர்களுடைய சகாயமே...
முத: வான தூதர்களின் அரசியே...
முத: முதுபெரும் தந்தையரின் அரசியே...
முத: இறைவாக்கினர்களின் அரசியே...
முத: திருதூதர்களின் அரசியே...
முத: மறைசாட்சிகளின் அரசியே...
முத: இறையடியார்களின் அரசியே...
முத: கன்னியரின் அரசியே...
முத: அனைத்துப் புனிதர்களின் அரசியே...

முத: அமல உற்பவியான அரசியே...
முத: விண்ணேற்பு பெற்ற அரசியே...
முத: திருச்சபையின் அரசியே...
முத: குருக்களின் அரசியே...
முத: குடும்பங்களின் அரசியே...
முத: அமைதியின் அரசியே...

முத: உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே
எல்: எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்!
முத: உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே
எல்: எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்!
முத: உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே
எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்!

எல்: இறைவனின் தூய அன்னையே, இதோ உம்மிடம் சரண் அடைய ஓடி வந்தோம். எங்கள் அவசரங்களில் நாங்கள் வேண்டிக்கொள்ளும் போது நீர் பாரா முகமாய் இராதேயும். ஆசீர்வதிக்கப்பட்டவரும் விண்ணகத்துக்கு உரியவருமாக இருக்கிற தூய கன்னியே, எல்லா ஆபத்துக்களிலிருந்தும் எங்களைப் பாதுகாத்தருளும்.

முத: மன்றாடுவோமாக...
முத: இறைவா, முழு மனதுடன் உம் திரு முன் பணிந்திருக்கும் எங்கள் குடும்பத்தைப் பார்த்து, எப்பொழுதும் கன்னியான தூய மரியாவின் பரிந்துரையினாலே, எங்கள் எதிரிகள் அனைவரின் தாக்குதல்களிலிருந்து எங்களைப் பாதுகாத்தருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
எல்: ஆமென்

## வாழ்க அரசியே செபம்:

எல்: வாழ்க அரசியே! தயை மிகுந்த அன்னையே, எங்கள் வாழ்வே, இனிமையே, அடைக்கலமே வாழ்க! தாயகம் இழந்த ஏவாளின் மக்கள் நாங்கள், தாயே என்று உம்மைக் கூவி அழைக்கிறோம். கண்ணீரின் பள்ளத் தாக்கிலிருந்து உம்மை நோக்கிக் கதறி அழுது, பெருமூச்சு விடுகிறோம். ஆதலால் எங்களுக்காகப் பரிந்துரைக்கும் தாயே, அன்புடன் எம்மைக் கடைக்கண் பாரும். உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவை, எங்கள் இம்மை வாழ்வின் இறுதியில் காணச் செய்யும். கருணையின் உருவே! தாய்மையின் கனிவே! இனியக் கன்னித் தாயே!

முத: இயேசு கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதி பெறும் படியாக...

எல்: இறைவனின் தூய அன்னையே! எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

முத: செபிப்போமாக! இறைவா! முழு மனதோடு தெண்டனிட்டு விழுந்து கிடக்கிற எங்களைப் பார்த்து எப்பொழுதும் கன்னியான தூய மரியாவின் பரிந்துரையினாலே, எல்லா பகைவர்களின் பிடியிலிருந்து எங்களை இரக்கத்துடன் மீட்டருளும். இந்த மன்றாட்டுக்களை எல்லாம் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் எங்களுக்குப் பெற்றுத் தந்தருளும் ஆண்டவரே.

எல்: ஆமென்.

முத: செபிப்போமாக! எல்லாம் வல்ல இறைவா! உமதருளால் விண்ணேற்றமடைந்த கன்னித் தாயாகிய மரியாவின் உடலும் ஆன்மாவும் தூய ஆவியாரின் வல்லமையால்

உம்முடைய திருமகனைச் சுமக்கத் தகுந்தப் பீடமாக இருக்க ஏற்கனவே தேர்ந்தெடுத்தீரே. அவரை நினைத்து மகிழ்கின்ற நாங்கள், அவருடைய இரக்கமுள்ள பரிந்துரையாலே இந்த உலகத்தின் எல்லா ஆபத்துக் களிலிருந்தும், துன்பங்களிலிருந்தும், இறப்பிலிருந்தும் எங்களை மீட்க இரக்கம் காட்டியருளும். இந்த மன்றாட்டுகளை எல்லாம் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல்: ஆமென்.

## புனித பெர்னார்டு செபம்:

எல்: மிகவும் இரக்கமுள்ள தாயே! உமது அடைக்கலமாக ஓடி வந்து, உம்முடைய உபகார சகாயங்களை இறைஞ்சி மன்றாடிக் கேட்ட ஒருவராகிலும் உம்மால் கைவிடப் பட்டதாக ஒருபோதும் உலகில் சொல்லக் கேள்விப் பட்டதில்லை என்று நினைத்தருளும். கன்னியருடைய அரசியான கன்னியே! தயையுள்ள தாயே! இப்படிப்பட்ட நம்பிக்கையால் ஏவப்பட்டு உமது திருப்பாதத்தை அண்டி வந்திருக்கிறோம். பெருமூச்செரிந்தழுது பாவிகளாயிருக்கிற நாங்கள் உமது தயாபரத்திற்குக் காத்து நிற்கின்றோம். அவதரித்த வார்த்தையின் தாயே எங்கள் மன்றாட்டை புறக்கனியாமல் தயாபரியாய் கேட்டுத் தந்தருளும் தாயே, ஆமென்.

எல்: ஜென்மப் பாவம் இல்லாமல் உற்பவித்த தூய மரியாயே, பாவிகளுக்கு அடைக்கலமே, இதோ உம்முடைய அடைக்கலமாக ஓடி வந்தோம். எங்கள் பேரில் இரக்கமாய் இருந்து எங்களுக்காக உமது திருமகனை வேண்டிக் கொள்ளும்.

(மங்கள வார்த்தை செபம் ~ மூன்று முறை)

முத: நமது திருத்தந்தை, ஆயர்கள், பங்குத் தந்தையர் அனைவரது கருத்துக்களும் நிறைவேறும் படியாகவும் நாம் வேண்டிக் கொள்வோம்.

எல்: கர்த்தர் கற்பித்த செபம் (1)
மங்கள வார்த்தை செபம் (1)
தமத்திருத்துவ செபம் (1)

## இறுதி செபம்:

முத: இயேசுவின் மதுரமான திரு இருதயமே...

எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்.

முத: மரியாவின் மாசற்ற திரு இருதயமே...

எல்: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத: மரியாவின் கணவராகிய தூய யோசேப்பே...

எல்: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத: தூய அந்தோணியாரே...

எல்: எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

முத: தூய மிக்கேலே... தூய ராபேலே...

எல்: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத: எங்கள் பெயர் கொண்டப் புனிதரே...

எல்: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத: எல்லா புனிதர்களே...

எல்: எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

முத: எங்கள் பெயர் கொண்ட வானதூதரே...

எல்: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத: எல்லா வான தூதர்களே...

எல்: எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

எல்: என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! என் முழு உளமே! அவரது திருப்பெயரை ஏத்திடு! என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! அவருடைய கனிவான செயல்கள் அனைத்தையும் மறவாதே! ஆமென்.

முத: நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மைப் பாதுகாக்க நம் நடுவிலும், நம்மைக் காப்பாற்ற நம் உள்ளும், நமக்கு வழிகாட்ட நம் முன்னும், நமக்குக் காவலாக நம் பின்னும், நம்மை ஆசீர்வதிக்க நம் மேலும் என்றென்றும் இருப்பாராக. தந்தை மகன் தூய ஆவியாரின் பெயராலே.

எல்: ஆமென்.

## இறுதிப் பாடல்:

***************